# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
************

**முறையீட்டு மனு எண் 1095/2016/பே.2**

**ஆணை எண். 51 /2018/ நாள் – 16 –03–2018**

**திரு. சி. ராஜவேலு,**
**H.4, பாலார் கார்டன்,**
**சத்துவாச்சாரி,**
**வேலூர் – 632 009** --- **முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**உதயேந்திரம் பேரூராட்சி,**
**வேலூர் மாவட்டம்.** --- **எதிர் மனுதாரர்.**

## ஆணை

திரு . சி. ராஜவேலு, எண் H-4. பாலார் கார்டன், சத்துவாச்சாரி, வேலூர் அவர்களின் 13.10.2016–ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2016–ல் பெறப்பட்டது முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 விதி –6ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் உரிய படிவத்தில் (படிவம் 1) பூர்த்தி செய்து அனுப்பக் கோரி இம்முறைமன்ற நடுவ 17.10.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

இதன் அடிப்படையில் முறையீட்டு மனுதாரர் 13.10.2016ம் நாளிட்ட மனுவில் உள்ள கோரிக்கைகள் அடங்கிய தனது மனுவினை 24.10.2016–ல் உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேற்படி முறையீட்டு மனு 27.10.2016ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 1095/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. உரிய அறிக்கைகள்/விளக்கங்கள் பெறப்பட்டும், நேரடி வாக்குமூலங்கள் பெறப்பட்டு உரிய பரிசீலினையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது :-

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், வேலூர் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர், திரு ந. ஆளவந்தார், குடிநீர் திட்டப் பணியாளர் திரு. செல்வம்

மற்றும் மேஸ்திரி திரு யு. தேவராஜன் ஆகியோர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். வேலூர் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சியிடமிருந்து தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005-ன்படி பெறப்பட்ட அறிக்கையின்படி, மேற்படி பேரூராட்சியில் குடிநீர் திட்டத்தின் கீழ் லட்சக் கணக்கான ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளது கண்டறியப்பட்டதாகவும், இதற்கெல்லாம் மூல காரணம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு ந. ஆளவந்தார், குடிநீர் திட்டப் பணியாளர் திரு செல்வம் மற்றும் மேஸ்திரி திரு யு. தேவராஜன் ஆகியோர் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பணியாளர்கள் மீது கீழ்கண்ட புகார்களை தனது மனுவில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

1. அம்பலூர் நீரேற்றும் நிலையத்திலிருந்து உதயேந்திரம் பேரூராட்சி எல்லை வரை சுமார் 22-க்கும் மேற்பட்ட டேனரிகள் உள்ளதாகவும், அவற்றில் 9-க்கும் மேற்பட்ட டேனரிகளுக்கு உதயேந்திரம் பேரூராட்சிக்கு பெறப்படும் தண்ணீர் திருப்பி விடப்படுவதாகவும், இதன் மூலம் மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை லஞ்சமாக பெறப்படுவதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். உதயேந்திரம் பேரூராட்சியில் 2,325 வீடுகள் உள்ளதாவும், இதற்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் சுமார் 2.20 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. அம்பலூர் நீரேற்றும் நிலையத்தில் இருந்து பெறப்படும் தண்ணீரையும் சேர்த்து 7.5 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுவதாக தெரிவித்துள்ளார். தினமும் அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர் விட வேண்டும் என்றால் 8,27,940 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படும் என செயல் அலுவலர் தெரிவித்துள்ளதாக முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால் இப்பேரூராட்சியில் 3 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் விடப்படுகிறது எனவும், 3 நாளைக்கு பெறப்படும் தண்ணீர் அளவு 22.5 லட்சம் லிட்டர் எனவும், 3 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விடப்படுவதால் மீதமுள்ள 14.22 லட்சம் லிட்டர் தண்ணீர் டேனரிகளுக்கு போவது நிரூபணம் ஆகிறது எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.
3. உதயேந்திரம் பேரூராட்சியில் குடிநீருக்காக செலுத்திய மின்சாரக் கட்டணம், ஏப்ரல், 2016ல் ரூ. 8,38,843/- மே. 2016ல் ரூ. 4,78,944/- மற்றும் ஜுன் 2016ல் ரூ. 4,30,832/- என தெரிவித்துள்ளார். ஆண்டுக்கு சராசரியாக ஒரு சிறிய பேரூராட்சிக்கு மின்சாரக் கட்டணம் ரூ 80.00 லட்சம் செலுத்தப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார். எனவே பொது மக்கள் பயனுக்காக அரசு ஒதுக்கும் தண்ணீர் தினசரி சப்ளை செய்யாமல் டேனரிகளுக்கு போவதால் லட்சக்கணக்கான ரூபாய் ஊழல் ஏற்படுவதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். இது குறித்து துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.
4. குடிநீர் திட்டத்தில் பைப் ரிப்பேர் செய்வதற்காக சுமார் ரூ 10.00 லட்சம் செலவு செய்துள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேஸ்திரி திரு தேவராஜன், மற்றும் குடிநீர் திட்டப் பணியாளர் திரு எஸ். செல்வம் ஆகியோர் ஊழல் செய்து சம்பாதித்த பணத்தில் தலா 10 வீடுகளுக்கு மேல் வாங்கியுள்ளதாகவும், வெற்றுச் செங்கல் (Hollow Bricks)

5. தொழிற்சாலை வைத்துள்ளதாகவும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே இது சம்பந்தமாக ஊழல் செய்தவர்கள், மற்றும் துணை போகும் உயர் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 28.10.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி, உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனு குறித்தான நேரடி விளக்கத்தினை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ 28.10.2016ம் நாளிட்ட அழைப்பாணை மூலம், முறையீட்டு மனுதாரரை இம்முறைமன்ற நடுவத்தில் 17.11.2.016 அன்று நேரில் ஆஜராக ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு சி. ராஜவேலு, இம்முறைமன்ற நடுவத்தில் 17.11.2016ல் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“. . . . . . . தான் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை பணியாளர்கள் சங்கத்தின் மாநில கௌரவத் தலைவராக உள்ளதாக தெரிவித்துள்ளார். தான் கடைசியாக பொது சுகாதாரத் துறையில் பணிபுரிந்து 2006–ஆம் ஆண்டு ஓய்வு பெற்றதாக தெரிவித்துள்ளார். 13.10.2016, 24.10.2016–ஆம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்பட்டது என தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு இதே போன்று புகார் மனு ஒன்று லஞ்ச ஒழிப்புத் துறைக்கு அனுப்பியதாகவும், ஆனால் அவர்களிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்யுமாறு தனக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

அம்பலூர் நீரேற்றும் நிலையத்திலிருந்து உதயேந்திரம் பேரூராட்சி வரை 22–க்கும் மேற்பட்ட தோல் பதனிடும் மற்றும் அது தொடர்பான தொழிற்சாலைகள் உள்ளதாகவும், இவற்றில் 9 டேனரிகளுக்கு பேரூராட்சியால் தண்ணீர் சப்ளை செய்யப்படுவதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதற்கு ஆதாரமாக திரு வி.எ.எஸ். அமானுல்லா என்பவர் அளித்த கடித நகலை சமர்ப்பித்துள்ளதாகவும், மற்ற தொழிற்சாலைகளின் பெயர் தனக்கு தெரியாது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். நீரேற்றும் நிலையத்தில் பணிபுரிபவர்கள் அங்கு தண்ணீர் வழங்குகிறோம் என சொல்வதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனு, பத்தி 3 குறித்து முறைமன்றத்திற்கு முறையீடு அனுப்பியதற்கு பிறகு தற்போது முறையாக குடிநீர் விநியேகம் நடைபெறுவதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சி, சிறிய பேரூராட்சி எனவும், இச்சிறிய பேரூராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 80.00 லட்சம் மின் கட்டணம் செலுத்தப்படுவதாகவும், இதற்கு காரணம் சட்டவிரோதமாக தோல் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் சப்ளை செய்வதாகும் எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் பதிவு செய்துள்ளார்.

குடிநீர் திட்டத்தில் பைப் ரிப்பேர் செய்வதற்கு ரூ 10.00 லட்சம் செலவு செய்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். இது மிகவும் அதிகமான தொகை எனவும், இதில் முறைகேடு நடந்துள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதற்கு மேஸ்திரி திரு தேவராஜன், மற்றும் குடிநீர் திட்டப் பணியாளர் திரு செல்வம் ஆகிய இருவருமே பொறுப்பாவார்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்

மேலே குறிப்பிட்ட திரு தேவராஜன், மற்றும் திரு செல்வம் ஆகியோர் இதுபோன்று முறைகேட்டில் சம்பாதித்த பணத்தை வைத்து தலா பத்து வீடுகளுக்கும் மேல் வாங்கியுள்ளனர் என தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். இதில் தண்ணீர் தொட்டி காவலர் திரு செல்வம் வாங்கியுள்ள வீடுகள் பற்றிய விவரங்களும் அவர் உதயேந்திரம் பேரூராட்சியில் இவைகளுக்கு செலுத்தியுள்ள சொத்து வரி ரசீதும் பேரூராட்சி மூலம் பெற்று ஒரு மாதத்தில் சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். தற்போது மேற்படி பணியாளர் தனது மகனுக்கு இனோவா கார் ஒன்றும் வாங்கியுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதே போன்று திரு தேவராஜன் மற்றும் அவருடைய மனைவி பெயரில் உள்ள சொத்துக்கள் விவரம் தனது வாக்குமூலத்துடன் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதில் வ.எண். 3–ல் உள்ள பரம்பரை வீடு புதியதாக ரூ 5.00 லட்சத்தில் சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இனம் 5–ல் 10 அடி அகலம், 120 அடி நீளம் புறம்போக்கு நிலத்தில் டிவி டவர் அமைத்து திரு தேவராஜ் அவர்கள் வாடகைக்கு விட்டுள்ளதாகவும், மனைவி பெயரில் விசாலம் நிதி நிறுவனத்தில் வைப்புத் தொகை லட்சக் கணக்கில் வைத்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு ஆளவந்தார், செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் திரு செல்வம், திரு யு. தேவராஜன், ஆகியோர் முறைகேடு செய்துள்ளதாகவும், செயல் அலுவலர் தற்போது தஞ்சை மாவட்டத்தில் பணிபுரிவதாகவும், தண்ணீர் தொட்டிக் காவலர் திரு செல்வம், உதயேந்திரம் பேரூராட்சியில் பணிபுரிவதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் அ.1/363/2016/நாள். 16.11.2016ன் மூலம் முறையீட்டு மனுவிற்கான தனது விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள 5 புகார்களுக்கான விளக்கத்தினை உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1. வேலூர் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சியில் நடைபெற்ற குடிநீர் திட்டப் பணிகளில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
2. வேலூார் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட டேனரிகளுக்கு பேரூராட்சியின் மூலமாக குடிநீர் வழங்கப்படுவதில்லை எனவும், வார்டு எண் 3 சி.வி. பட்டரையில் உள்ள குரோஸ் லெதர் எக்ஸ்போர்ட்ஸ் என்ற தொழிற்சாலைக்கு மட்டும் தொழிலாளர்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக குடிநீருக்கு மட்டுமே 2010–ஆம் ஆண்டு குடிநீர் இணைப்பு எண் 576–ன்படி குடிநீர் வழங்கப்பட்டு இதுநாள் வரையில் குடிநீர் கட்டணம் நிலுவையின்றி வசூலிக்கப்பட்டு வருவதாகவும், இதில் முறைகேடுகள் எதுவும் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
3. உதயேந்திரம் பேரூராட்சிக்கு காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலமாக 2.20 லட்சம் லிட்டர், அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் 4.00 லட்சம் லிட்டர், 60 சின்டெக்ஸ் டேங்க் மூலமாக 1.30 லட்சம் லிட்டர், ஆகமொத்தம் 7.50 லட்சம் லிட்டர்

குடிநீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எனவும்,இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4. உதயேந்திரம் பேரூராட்சி, அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் கட்டணம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| மார்ச்சு 2015 | – ரூ. 2,33,641/– |
| மே, 2015 | –ரூ. 1,55,479/– |
| ஜூலை, 2015 | –ரூ. 1,72,694/– |
| செப்டம்பர்,2015 | –ரூ. 1,30,758/– |
| நவம்பர், 2015 | –ரூ. 77,977/– |
| ஜனவரி, 2016. | –ரூ. 68,294/– |
| மொத்தம். | –ரூ. 8,38,843/– |

மார்ச்சு, 2016–ஆம் மாதத்திற்குண்டான மின் கட்டணம் ரூ 66,319/– மின் வைப்புத் தொகை ரூ.4,12,530/– ஆக மொத்தம் ரூ 4,78,944/– எனவும், மே, 2016ம் மாத மின் கட்டணம் மற்றும் இதர கட்டணம் உட்பட ஆக மொத்தம் ரூ 4,30,832/– செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கும் உதயேந்திரம் பேரூராட்சிக்கும் இடையே சுமார் 13 கிமீ தொலைவு தூாரம் உள்ளது எனவும், இதற்கிடையில் ஏற்படும் பைப்லைன்கள் பழுதுகள் உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு குடிநீர் தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை எனவும் தனது அறிக்கையில் உதயேந்திரம் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் உதயேந்திரம் பேரூராட்சியில் மேஸ்திரியாக பணிபுரிந்து வந்த திரு யு. தேவராஜன் மற்றும் குடிநீர் திட்டப் பணியாளர் திரு செல்வம் ஆகியோர் மீது கூறப்பட்டுள்ள புகார் உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையைல் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 22.11.2016ம் நாளிட்ட அழைப்பாணையில் உதயேந்திரம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு ந. ஆளவந்தார், மேஸ்திரி திரு யு.தேவராஜன், மற்றும் குடிநீர் திட்டப் பணியாளர் திரு எஸ். செல்வம் ஆகியோரின் நேரடி விளக்கத்தினை பெறவேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் 29.12.2016அன்று நேரில் ஆஜராக ஆணையிடப்பட்டது.

முன்னாள் உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரும் தற்போதைய தஞ்சாவூர் மாவட்டம், தாராசுரம் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு ந. ஆளவந்தார் இம்முறைமன்ற நடுவத்தில் 29.12.2016ல் நேரில் ஆஜராகி கீழ்கண்ட வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

“. . . . . . திரு சி. ராஜவேலு என்பவருடைய 13.10.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு விவரம் தெரியுமென்றும், தனது பணிக்காலத்தில் புதியதாக குடிநீர் இணைப்பு வீடுகளுக்கோ, தொழிற்சாலைகளுக்கோ வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு சி.ராஜவேலு, தனது புகார் மனுவில் குறிப்பிட்ட எந்த குற்றச்சாட்டும் தனக்கு சம்பந்தமானது அல்ல எனவும், தனக்கு முன்பு இருந்த செயல் அலுவலர் திரு இரவிக்குமார், மின்சார வாரியத்திற்கு

2014– ஆம் ஆண்டிலிருந்து மின் கட்டணம் செலுத்தாமல் நிலுவை வைத்துவிட்டார் என தெரிவித்துள்ளார். தான் மேற்படி காலங்களுக்கான மின்சாரத் தொகையினை மொத்தமாக கட்டியதால் மின்சார செலவு அதிகமாகியது என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். அது குறித்து உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிக்கை அனுப்பியுள்ளதாகவும் அதன் நகலினை தற்போது சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மனுதாரர் மனுவில் இணைக்கப்பட்டுள்ள, பேரூராட்சியிலிருந்து வழங்கப்பட்ட பதில் தன்னால் வழங்கப்படவில்லை எனவும், திரு ரா.ஆனந்தன், தற்போது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்தவர் வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார். பதப்படுத்தப்பட்ட தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இப்பேரூராட்சியில் நடைபெறுவதாகவும் அவர்கள் தனியாக போர் அமைத்து தண்ணீர் எடுத்துக் கொள்கிறார்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் உதயேந்திரம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு ந. ஆளவந்தார் பதிவு செய்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சியின் முன்னாள் துப்புரவு மேற்பார்வையாளரும், தற்போதைய ஒடுகத்தூர் பேரூராட்சி சுகாதார மேற்பார்வையாளருமான திரு யு தேவராஜன், 29.12.2016ல் இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

". . . . . . . தான் உதயேந்திரம் பேரூராட்சியில் ஏப்ரல் 2015 முதல் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து, பின்பு ஒடுகத்தூர் பேரூராட்சியில் 15.07.2016 முதல் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார். மனுதார்ர் திரு இராஜவேலு என்பவருடைய மனு விவரம் தனக்கு தெரியும் என தெரிவித்துள்ளார். தான் பொது சுகாதார பணிகளை மட்டுமே பார்ப்பதாகவும், குடிநீர் வழங்குவது தன் பொறுப்பில் வராது எனவும், குடிநீர் பைப் ரிப்பேர் செய்ய ரூ 10.00 லட்சம் செலவு செய்யப்பட்ட புகார் தனக்கு சம்பந்தமில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் தான் 10 வீடுகளுக்கு மேல் வாங்கியுள்ளதாக கூறுவது சரியானதல்ல எனவும், மேலும் ஹாலோ பிரிக் தொழிற்சாலையும் தான் வைக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ள திருவள்ளுவர் தெருவில் உள்ள வீடு தனது சொந்த வீடு அல்ல எனவும், திரு கோவிந்தசாமி செட்டியார் அவர்களுக்கு சொந்தமானது எனவும் தெரிவித்துள்ளார். வரிசை எண் 2ல் கைலாசகிரி ரோடு தெருவில் உள்ள ஒரே ஒரு அடுக்குமாடி வீடு மட்டும் தனது மனைவி பெயரில் உள்ளது. அது 615 சதுர அடியாகும் எனவும் இது 10 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். அந்த ஆவணங்களின் நகல்களை இரண்டு தினங்களில் சமர்ப்பிப்பதாகவும், இது தனது தந்தையின் பூர்வீக சொத்து எனவ்ம் தெரிவித்துள்ளார். மேற்படி சொத்து குறித்து தான் பணிபுரியும் அலுவலகத்திற்கு தெரிவிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அடுத்தடுத்து வீடுகள் உள்ளது என்பது உண்மையல்ல எனவும், நாயுடு தெருவில் உள்ள பரம்பரை வீடு எனது இரண்டு அண்ணன்கள் பங்கில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். வரிசை எண் 5ல் சொல்லப்பட்ட கைலாசகிரி ரோட்டில் உள்ள வீட்டில் T.V. டவர் வைப்பதற்கு வாடகைக்கு விட்டுள்ளதாகவும் ரூ.5,000/– தனது அண்ணனுக்கே கொடுத்துவிடுதாகவும் தெரிவித்துள்ளார். இதில் தனக்கும் தனது அண்ணனுக்கும் பங்கு உள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனது பெயரிலோ தனது மனைவி பெயரிலோ நிதி

நிறுவனம் நடத்தவில்லை எனவும் தபால் நிலையத்தில் எந்தவித வைப்புத் தொகையும் செய்யவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். பேரூராட்சி பணியாளர்கள் தான் வேலை வாங்குவதாக அவர்களுடைய பணியாளர் தொழிற்சங்கத்தில் புகார் செய்துள்ளதாகவும், அப்புகார் கடிதத்தின் மீது விசாரணை ஏதும் இல்லாமல் தன்னை ஒடுகத்தூர் பேரூராடசிக்கு மாற்றிவிட தெரிவித்துள்ளதாகவும், இந்நிலையில் தானே தன்னை மாற்றக் கோரி மனு செய்து பணிமாறுதல் பெற்றதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு ச. செல்வம், துப்புரவு மேற்பார்வையாளர் இம்முறைமன்ற நடுவத்தில் **29.12.2016**ல் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

". . . . . தான் உதயேந்திரம் பேரூராட்சியில் 27 ஆண்டுகளாக துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார். திரு சி. ராஜவேலு என்பவருடைய புகார் மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும் குடிநீர் திட்டப் பணிகளுக்கு, ரிப்பேர் பார்க்கப்பட்டதில் முறைகேடு ஏதும் நடக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பழுது பார்க்கும் பணி நடந்த இடத்தில் புகைப்படம் எடுத்து மன்ற உறுப்பினர் ஒப்புதல் கடிதம் பெற்று அதன் பின்னர் பணம் பட்டுவாடா செய்யப்படுவதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு உண்மையானது அல்ல எனவும் தெரிவித்துள்ளார். இனம் 1-ல் வி.எப். சேவியர், 2-வது தெருவில் ஒரே தளம் உள்ள வீடு தனது தந்தையினுடையது எனவும், புனித செபாஸ்டியர் தெருவில் உள்ள வீடு தனது மாமனார் வீடு எனவும் தெரிவித்துள்ளார். கல்லறை பின்புறத்தில் பெரிய மாடி வீடு உள்ளது என்பது சரியல்ல எனவும், எம்.எல்.ஏ அவர்களின் வீடு உள்ளது என தெரிவித்திருப்பதும் உண்மையல்ல என தெரிவித்துள்ளார். இனம் 5-ல் சொல்லப்பட்டுள்ள 4-வது வார்டில் தனக்கோ தனது மனைவிக்கோ நிலம் இல்லை எனவும், தனது மகனுக்கு புதிய கார் ஏதும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனது மகன்கள் படித்துக் கொண்டிருப்பதாகவும், தனது மனைவியின் தாய் வீடு மும்பையில் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். தனது மாமியார் மும்பையில் இல்லை எனவும், 5 ஆண்டுகளுக்கு முன்னர் சென்றிருந்தார் எனவும் அதன்பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்று வந்தார் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற **12.05.2017**ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் **13.10.2016, 24.10.2016** -ம் நாளிட்ட மனு, **16.11.2016**ம் நாளிட்ட உதயேந்திரம் பேரூராட்சியின் செயல் அலுவலரின் விளக்கக் கடிதம், **23.12.2016** அன்றைய நேர்முக விசாரணையின்போது மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூல நகல்கள் ஆகியவற்றினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் **2014** பிரிவு **6(4) (a)** ன் கீழ் உரிய பரிசீலனை மற்றும் தல ஆய்வு மேற்கொண்டும் தொடர்புடைய ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்தும் விரிவான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் தனது கடித எண் **1126/2017/ஆ**/நாள் **05.06.2017**ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திரு சி. ராஜவேலு, அவர்களின் 13.10.2016, மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் தொடர்பாக உதயேந்திரம் பேரூராட்சியில் 25.05.2017ல் ஆய்வு மேற்கொண்டதாகவும் அதன் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. உதயேந்திரம் பேரூராட்சியில் குடிநீர் திட்டத்தில் லட்சக்கணக்கான ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளது இதற்கு காரணம் திரு செல்வம் குடிநீர் திட்டப் பணியாளர் திரு ந. ஆளவந்தார் மற்றும் திரு தேவராஜன் ஆகியோர் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் இவர்களில் திரு செல்வம் 02.05.2017ல் இப்பேரூராட்சியில் இருந்து மாற்றப்பட்டு 03.05.2017ல் விடுவிக்கப்பட்டதாகவும், செயல் அலுவலர் திரு ந. ஆளவந்தார் 02.09.2016ல் மாறுதல் அளிக்கப்பட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் திரு யு. தேவராஜன், துப்புரவு மேற்பார்வையாளர் 15.07.2016ல் மாறுதலளிக்கப்பட்டு ஒடுகத்தூர் பேரூராட்சியில் பணிபுரிகிறார் என தெரிவித்துள்ளார். உதயேந்திரம் பேரூராட்சியில் 30 டேனரிகள் இயங்கி வருவதாக தெரிவித்துள்ளார். இதில் இப்பேரூராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ள 814 குடிநீர் இணைப்புகளில், 9 இணைப்புகள் மட்டுமே வணிக நோக்கத்திலான இணைப்புகள் எனவும் அதில் டேனரிக்கு 1 (ஒன்று) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவற்றில் திருவாளர் குரோஸ் லெதர் எக்ஸ்போர்ட்ஸ், சி.வி பட்டறை என்ற நிறுவனத்திற்கு மட்டுமே பேரூராட்சியால் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். இந்நிறுவனமும் கடந்த ஓராண்டாக மூடப்பட்டு இயங்காத நிலையில்,தற்போது விற்பனை செய்யப்பட்டு மெர்க்குரி ஷூஸ் என்ற பெயரில் இயங்கி வருகிறது எனவும் இந்நிறுவனத்தினை ஆய்வு செய்தபோது குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிறதென்றும், பணியாளர்களுக்கு குடிநீர் விலைக்கு வாங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதைத் தவிர மீதமுள்ள 29 டேனரிகளும் அவர்களின் இடத்திற்குள்ளேயே கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து அந்த நீரையே பயன்படுத்தி வருவதை அந்தந்த நிறுவன மேலாளர்கள் மூலமும், நேரில் ஆய்வு செய்தும் உறுதி செய்யப்பட்டது எனவும் முறைகேடான இணைப்பு ஏதும் கண்டறியப்படவில்லை எனவும் இக்குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பானதும் முழுக்க முழுக்க பொய்யானதும் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
2. உதயேந்திரம் பேரூராட்சியின் மக்கள் தொகை 13,837 எனவும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் 9,68,590 லிட்டர் தேவைப்படுவதை கீழ்கண்ட ஆதாரங்களில் இருந்து பெறப்படுவதாக தெரிவித்துள்ளார்.

காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 2.20 லட்சம் லிட்டர் முதல் 2.40 லட்சம் லிட்டர் வரையிலும், எக்லாஸ்புரம் நீரேற்று நிலையத்தில் இருந்து நாளொன்றுக்கு 1.20 லட்சம் லிட்டர் தண்ணீரும், 68 சிறு மின்விசைப் பம்புகள் மூலம் காலை மற்றும் மாலை வேளைகளில் சின்டெக்ஸ் தொட்டி மூலம் மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் பெறப்படும் நீரானது பொதுமக்களுக்கு தடையின்றி

விநியோகிக்கவே சரியாக உள்ள நிலையில் உபரியான நீரினை டேனரிகளுக்கு வழங்குவது என சொல்வது முற்றிலும் தவறானது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சியில் 2016-2017 ம் ஆண்டு கணக்கின்படி 01.04.2016 முதல் 31.03.2017 முடிய (1) குடிநீர் விநியோகம், (2) தெரு விளக்குகள் மற்றும் (3) அலுவலகக் கட்டிடம் மற்றும் அனைத்துக் கட்டிடங்களுக்கும் சேர்த்து வைப்புத் தொகை உட்பட மொத்தம் ரூ.27,25,497/- மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும் இதில் வைப்புத் தொகை ரூ 4,12,530/- போக மின் கட்டணம் ரூ 23,12,967 மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் ரூ 80.00 லட்சம் மின்கட்டணம் செலுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சியில் குடிநீர் பைப் ரிப்பேர் என 3 மாதங்களில மொத்தம் ரூ.1,19,526/- மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையில் மாதம் சராசரியாக ரூ.40,000/- மட்டுமே செலவாகியுள்ளது எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் ரூ.10.00 லட்சம் செலவிடப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சியின் வரி விதிப்பு பதிவேடுகளின்படி திரு யு. தேவராஜன். முன்னாள் துப்புரவு பணியாளர் மற்றும் திரு ச. செல்வம், துப்புரவு மேற்பார்வையாளர் ஆகியோருக்கு கீழ்கண்ட விவரப்படி சொத்துக்கள் உள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**திரு யு. தேவராஜன், தொடர்பானவை :-**

| வ. எண் | வரிவிதிப்பு எண் | முகவரி | சொத்து வரி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 1032 | திருமதி. விசாலா, க/பெ திரு தேவராஜ், 34 காந்தி தெரு | ரூ 72/- | தகப்பனார் சொத்து பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்டது. |
| 2. | 1145 | திருமதி விசாலா, க/பெ திரு தேவராஜ், 4/பி, பாரதியார் தெரு | ரூ 72/- | தகப்பனார் சொத்து பாகப்பரிவினை மூலம் பெறப்பட்டது. |
| 3. | 2622 | திரு யு. தேவராஜ், பாரதியார் தெரு | ரூ 246/- | பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்டது (ஏர்செல் டவருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது) |
| 4. | 1508 | திருமதி விசாலா, க/பெ திரு தேவராஜ், எண் 0/1 மேட்டுப்பாளையம் காலனி | ரூ 140/- | புறம்போக்கு இடம். |

**திரு எஸ். செல்வம், துப்புரவு மேற்பார்வையாளர் என்பவருக்கு சொந்தமான சொத்துக்கள் :-**

| வ. எண் | வரிவிதிப்பு எண் | முகவரி | சொத்து வரி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 671 | டி.எஸ். சந்தியாவு, 39,புனித ஜெபஸ்தியர் 2வது தெரு | ரூ 76/- | தாயார் பெயரில் உள்ளது |
| 2 | 674 | ஸ்டெல்லா மேரி,63/0எ, புனித ஜெபஸ்தியர் 2-வது தெரு | ரூ 56/- | - |

மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்களில் திரு தேவராஜன் என்பவரது பெயரில் உள்ள 4ல் ,3 வகையான சொத்துக்கள் யாவும் அவரது குடும்ப பாகப்பிரிவினை மூலமும் 1 வகையான சொத்து புறம்போக்கு இடம் எனவும் தெரிவித்துள்ளார்.

திரு செல்வம் என்பவரது தந்தையின் வீடானது அவரது தயாரின் பெயரில் உள்ளதாகவும் 1 வீடு மட்டும் அவரது மனைவி பெயரில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர மேற்படி இருவருக்கும் வேறு எந்தவிதமான சொத்துக்களுக்கும் உதயேந்திரம் பேரூராட்சியில் வரி விதிப்பு ஏதும் இல்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் திரு யு. தேவராஜன் என்பவருககு சொந்தமான காலியிடத்தில் K.V.G Hallow blocks என்ற நிறுவனத்திற்கு அவரால் வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் துவங்கப்பட்ட 6 மாதத்திலேயே அந்த நிறுவனம் மூடப்பட்டு விட்டது எனவும் மேற்படி நிறுவனம் பேரூராட்சி அலுவலகத்திற்கு எதிரிலேயே உள்ளது ஆய்வின்போது உறுதி செய்யப்பட்டதாகவும் அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 10.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் வேலூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையில் உதயேந்திரம் பேரூராட்சியின் முன்னாள் துப்புரவு பணியாளர் திரு யு. தேவராஜன் என்பவர் சொத்துக்கள் குறித்த பட்டியலில் மூன்று வகையான சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்டதாகவும், ஒரு வகையான சொத்து புறம்போக்கு இடத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பரிவினை மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் யாவும் அரசு விதிகளின்படி முறையாக அனுமதி பெறப்பட்டு பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரங்களை தெரிவிக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் அவர்களின் 08.09.2017ம் நாளிட்ட கடிதத்தில், உதயேந்திரம் பேரூராட்சி முன்னாள் துப்புரவு பணியாளருக்கு பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்ட மூன்று வகையான சொத்துக்களுக்கு அரசு விதிகளின் படி அனுமதி ஏதும் பெறப்படவில்லை எனவும் இது குறித்து மேற்படி பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரர் ஆகியோர்களின் நேரடி வாக்குமூலங்கள் மற்றும் வேலூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை ஆகியவற்றினை பரிசீலித்து கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

உதயேந்திரம் பேரூராட்சியில் உள்ள டேனரிகளுக்கு அரசு வழங்கும் குடிநீர் முறைகேடாக வழங்கப்படுவது என தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின்படி ஆதாரமற்றது என உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மின்சாரக் கட்டணத்தினை பொருத்தமட்டில் பேரூராட்சி உதவி இயக்குநரின் அறிக்கையின்படியும், பேரூராட்சியின்2016-17ம் ஆண்டு மின்கட்டண பதிவேடுகளின்படியும் ரூ.23,12,967 /- மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. ரூ 80.00 லட்சம் செலுத்தப்பட்டுள்ளது என்பது நிருபிக்கப்படவில்லை.

உதயேந்திரம் பேரூராட்சியின் முன்னாள் துப்புரவு பணியாளர் திரு ச. செல்வம் என்பவரின் பெயரில் உள்ள இரண்டு வகையான சொத்துக்களில் ஒன்று மேற்படி நபரின் தாயாரின் பெயரில் உள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மற்றொன்றிற்கான விவரம் தெரிவிக்கப்படவில்லை. இச்சொத்தின் விவரத்தினை அறிந்து அது யார் பெயரில் உள்ளது, அது முறையாக அரசு விதிகளின்படி அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து துறைரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

திரு யு. தேவராஜன், என்பவர் பெயரில் உள்ள 4 வகையான சொத்துக்களில், 3 வகையான சொத்துக்கள் அவரின் குடும்ப பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்டதாகவும் இச்சொத்துக்கள் யாவும் திரு தேவராஜன், மற்றும் அவரது மனைவி பெயரில் பேரூராட்சியில் வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு நகலில் மேற்படி சொத்துக்கள் பெறப்பட்டமைக்கான ஆதாரங்களோ அவற்றிற்கு உரிய துறையினது உத்திரவு பெறப்பட்டமைக்கான பதிவுகளோ காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு விதிமுறைகளின்படி ஒரு அரசு ஊழியர் சொத்துக்கள் தன் பெயரிலோ தனது மனைவி பெயரிலோ வாங்க உரிய அனுமதி பெறப்பட்டு உரிய பதிவுகளை சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் பதியப்படவேண்டும். இந்நிலையில் மேற்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படாதது குறித்து சம்பந்தப்பட்டவர் மீது உரிய விளக்கங்கள் பெற்று துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும், சம்பந்தப்பட்ட பணியாளர் புறம்போக்கு நிலம் ஒன்றினையும் தன் வசம் வைத்துள்ளது குறித்தும், வரிவிதிப்பு குறித்தும், உரிய துறைரீதியான விசாரணை நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது. மேலும் மேற்படி புறம்போக்கு நிலத்திற்கு சொத்து வரி முறைகேடாக விதிக்கப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றநடுவர்

–//உத்தியின்படி – அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.திரு சி. ராஜவேலு,
H-4, பாலார் கார்ட்ன்,
சத்துவாச்சாரி,
வேலூர்

2.பேருராசிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை–108.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
வேலூர்.

4.செயல் அலுவலர்,
உதயேந்திரம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

செயலாளருக்காக